இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 29-01-2025

# தமிழ்நாட்டை அழிக்க நினைக்கும் ஆளுநர்

“தமிழ்நாட்டின் வளர்ச்சி சரிவுப் பாதையில் செல்கிறது” என்று சொல்லி இருக்கிறார் ஆளுநர் ஆர்.என்.ரவி. தமிழ்நாட்டின் வளர்ச்சி சரிய வேண்டும் என்று ஆளுநர் நினைக்கிறார். அது தான் உண்மை.

தமிழ்நாட்டுக்குள் உட்கார்ந்து கொண்டு ‘உண்ட வீட்டுக்கு ரெண்டகம்’ நினைத்துக் கொண்டிருக்கிறார் ஆளுநர். எவ்வளவு கெட்ட எண்ணமும் குறுமதியும் கொண்டவராக ரவி இருக்கிறார் என்றால், குடியரசு தினத்தன்று அவர் விடுத்த அறிக்கையே போதும். அவரது இழி எண்ணத்தின் மொத்த படப்பிடிப்பாக அந்த அறிக்கை அமைந்துள்ளது.

“முதலீட்டாளர்கள் தமிழ்நாட்டை விடுத்து மற்ற மாநிலங்களுக்குச் சென்று கொண்டிருக்கிறார்கள்” என்று சொல்லி இருக்கிறார் ரவி. இதற்கு என்ன ஆதாரம்? இப்படி வாய்க்கு வந்ததை ஆளுநர் பதவியில் இருந்து கொண்டு பேசலாமா? முதலீட்டாளர்கள் தமிழ்நாட்டுக்குள் வரக்கூடாது, வந்தாலும் போய்விட வேண்டும் என்ற துஷ்ட மனம் கொண்டவராக ரவி இருக்கிறார்.

**கடந்த மூன்று ஆண்டுகளில் உள்நாட்டு பன்னாட்டு நிறுவனங்களுடன் தமிழ்நாடு அரசு 893 புரிந்துணர்வு ஒப்பந்தங்களைப் போட்டுள்ளது.**

**இந்த ஒப்பந்தங்களின் மொத்த மதிப்பானது ரூ.10.07 லட்சம் கோடி ஆகும். இதன் மூலமாக 31 லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். இவை அனைத்தும் ஏதோ வாய்க்கு வந்ததைச் சொல்லும் தகவல்கள் அல்ல. இவை அனைத்துக்கும் ஆதாரங்கள் உள்ளன. யாரும் சும்மா வந்து ஒப்பந்தம் போட மாட்டார்கள்.**

* தமிழ்நாடு இந்திய நாட்டின் இரண்டாவது வளர்ந்த பொருளாதார மாநிலமாக இருக்கிறது. இது ஆளுநர் ரவிக்குத் தெரியாதா? பிரதமருக்கான பொருளாதார ஆலோசனைக் குழுவின் (Economic advisory council report to pm report EACPM) அறிக்கையை எடுத்துப் பார்க்கவும். இந்திய அளவில் இரண்டாவது பெரிய பொருளாதார மாநிலமாக தமிழ்நாடு வளர்ச்சி பெற்றுள்ளது என்பது அந்த அறிக்கையில் இருக்கிறது. சொல்வது பிரதமரின் ஆலோசகர்? ஆளுநருக்கு அவரது அரைகுறை ஆலோசகர்கள் இதைச் சொல்வது இல்லையா?

* தேசிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5.4 விழுக்காடாக இருந்த தமிழ்நாட்டின் பங்கு, கடந்த நான்கு ஆண்டுகளில் 9.21 விழுக்காடாக உயர்ந்துவிட்டதை அவர் அறிய மாட்டாரா?

* பொருளாதார, சமூகக் குறியீடுகள் அனைத்திலும் தமிழ்நாடு வளர்ச்சியை எட்டி இருக்கிறது என்பதை ஒன்றிய அரசின் அறிக்கைகளே சொல்கிறதே. அதை ஆளுநர் வாங்கிப் பார்க்கலாம்.

* ‘மக்களைத் தேடி’ மருத்துவம் திட்டம் 2024 ஆம் ஆண்டுக்கான ஐக்கிய நாடுகளின் முகமைகளுக்கு இடையேயான விருதைப் பெற்ற செய்தியை ஆளுநர் அறியவில்லையா?

* தமிழ்நாட்டின் மக்கள் தொகையில் பன்முக வறுமைக் குறியீடுகளின் கீழ் 2.2 விழுக்காடு மக்கள் மட்டுமே ஏழைகளாக இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது தேசிய சராசரியான 14.96 விழுக்காட்டை விட மிகமிகக் குறைவு என்பதை தன்னைச் சுற்றி இருக்கும் (துக்ளக் ரசிகர்களை விலக்கிவிட்டு!) அதிகாரிகளைக் கேட்டு தெரிந்து கொள்ளலாமே ஆளுநர்!

* இந்திய நாட்டின் மொத்தப் பெண் தொழில் பணியாளர்களில் 41 விழுக்காடு பெண்கள் தமிழ்நாட்டில் உள்ளனர். சமூகத்தின் சரி பாதியான பெண்களின் சமூக பங்களிப்பானது பாதிக்குப் பாதி என்ற சூழலை எட்டும் அமைதிமிகு மாநிலமாக தமிழ்நாடு வளர்ந்து வருவதை அவர் விரும்பவில்லையா?

தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா அவர்கள் வெளியிட்ட அறிக்கையில் முக்கியமான ஒரு தகவலைச் சொல்லி இருக்கிறார்கள்.

சுவிட்சர்லாந்து நாட்டின் டாவோஸ் நகரில் உலகப் பொருளாதார மன்றத்தில் (World Economic ForumWEF2025) ஆண்டுதோறும் மாநாடு ஒன்று நடக்கும். முந்தைய அ.தி.மு.க. ஆட்சியின் 10 ஆண்டுகாலத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில் எவரும் எட்டிக்கூடப் பார்க்கவில்லை. தி.மு.க. அரசு அமைந்த பிறகு கடந்த மூன்றாண்டுகளாகத்தான் தமிழ்நாடு அரசின் சார்பில் தொழில்துறை அமைச்சரும், துறை சார்ந்த அதிகாரிகள் வல்லுநர் குழுவும் பங்கேற்று வருகிறார்கள். இது குறித்து அறிக்கை வெளியிட்டிருக்கும் தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா அவர்கள் வெளியிட்ட அறிக்கையில் முக்கியமான ஒரு தகவலைச் சொல்லி இருக்கிறார்கள்.

**“இந்த ஆண்டு கலந்து கொண்ட போது, டாவோஸ் உலகப் பொருளாதார மன்றத்தில் இந்தியா பெவிலியனைத் தொடங்கி வைக்கும் நிகழ்விலும் தமிழ்நாட்டிற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு, மராட்டிய மாநில முதலமைச்சர் மற்றும் சில மாநிலங்களின் அமைச்சர்களுடன் இணைந்து அந்த நிகழ்வில் பங்கேற்றேன். தமிழ்நாட்டில் கடந்த மூன்றாண்டுகளில் உருவாகியுள்ள தொழில்வளர்ச்சியையும், தொழிற்கட்டமைப்புகளையும், புதிய முதலீடுகளுக்கான சூழலையும் விளக்கி, ஏற்கனவே தொழில்துறையில் வளர்ந்துள்ள மாநிலங்களுடன் ஒருங்கிணைந்து இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு தமிழ்நாடு ஆற்றி வரும் முக்கியப் பங்கினைக் குறிப்பிட்டேன்”** என்று குறிப்பிட்டு இருக்கிறார் தொழில் துறை அமைச்சர். தமிழ்நாட்டின் முன்னேற்றமானது சுவிஸ் வரைக்கும் பரவி இருக்கிறது. ஆனால் கிண்டியில் இருந்து கொண்டு ஒருவர், இன்னமும் பொய்யைக் கிண்டிக் கொண்டிருக்கிறார்.

**‘பூனை கண்ணை மூடிக் கொண்டதால் உலகம் இருண்டு விடாது’ என்பதைத்தான் ஆளுநருக்குப் பதிலாகச் சொல்ல முடியும்.**



புதுடெல்லியில் நேற்று முன்தினம் (27.01.2025) ஒன்றிய ஊரக வளர்ச்சி மற்றும் வேளாண்மை / உழவர் நலத் துறை அமைச்சர் சிவ்ராஜ் சிங் சவுகானை தமிழ்நாடு அரசின் நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு சந்தித்து மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் 27.11.2024 முதல் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஊதிய நிலுவை தொகையான ரூ.1,635 கோடியினை உடனடியாக விடுவிக்கக் கோரியும், 2024–25 ஆம் ஆண்டிற்கு கூடுதல் மனித சக்தி நாட்களுக்கு ஒப்புதல் வழங்கவும், தமிழ்நாட்டில் இத்திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்திட தொடர்ந்து ஆதரவு வழங்கிடவும் கடிதம் வாயிலாக கேட்டுக்கொண்டார். உடன் நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, ஒன்றிய ஊரக வளர்ச்சி இணைச் செயலாளர் திருமதி ரோகிணி ஆர்.பாஜிபாகரே ஆகியோர் உள்ளனர்.

### அரசியலமைப்புச் சட்டப்படி அடிப்படை உரிமைகள் மீறப்படவில்லை!

## சனாதனம் குறித்து - துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பேச்சுக்கு எதிராக வழக்குத் தொடர உச்சநீதிமன்றம் அனுமதி மறுப்பு!

### துணை முதல்வருக்குக் கிடைத்துள்ள மகத்தான வெற்றி!

**புதுடெல்லி, ஜன. 29 -**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சனாதனம் குறித்த பேச்சுக்கு எதிராக வழக்கு தொடர உச்சநீதிமன்றம் அனுமதி மறுத்துள்ளதைத் தொடர்ந்து வழக்கு தொடர அனுமதி கோரிய 3 ரிட் மனுக்களையும் மனுதாரர்கள் திரும்பப் பெற்றனர் !**

**இது துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு கிடைத்துள்ள மாபெரும் வெற்றியாகும்.**

இது பற்றிய விவரம் வருமாறு:–

சென்னையில் நடைபெற்ற தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் சனாதன ஒழிப்பு மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய உதயநிதி ஸ்டாலின், “இந்த மாநாட்டின் தலைப்பே மிகவும் சிறப்பாக அமைந்திருக்கின்றது. ‘சனாதன எதிர்ப்பு மாநாடு’ என்று போடாமல் ‘சனாதன ஒழிப்பு மாநாடு’ என்று நீங்கள் போட்டிருக்கிறீர்கள். அதற்கு என்னுடைய வாழ்த்துகள்” என்று குறிப்பிட்டார்.



2.9.2023 அன்று சென்னையில் பேசிய தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினுக்கு எதிராக வழக்கறிஞர் பி.ஜெகநாத் மற்றும் இருவர் உச்ச நீதிமன்றத்தில் மூன்று ரிட் மனுக்களை தாக்கல் செய்தனர். சனாதன தர்மம் தொடர்பான அவரது பேச்சு அரசியல் சாசனத்துக்கு எதிரானது என அறிவிக்குமாறு கோரியிருந்தார்கள். துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மீது முதல் தகவல் அறிக்கை (எஃப்ஐஆர்) பதிவு செய்து மேல் நடவடிக்கை எடுக்குமாறும் காவல்துறை தலைமை இயக்குநரிடம் (டிஜிபி) கோரிக்கை விடுத்தனர்.

இந்த வழக்கு உச்சநீதிமன்றத்தில் நேற்று முன்தினம் (27.1.2025) கௌரவ நீதிபதிகள் பேலா எம். திரிவேதி மற்றும் பிரசன்னா பி.வரலே ஆகியோர் முன்பு விசாரணைக்கு வந்தபோது, உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சனாதனம் குறித்து கூறிய கருத்து இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படை உரிமைகள் ஏதும் மீறப்படவில்லை என்றும், அவர் தெரிவித்த கருத்தில் எவ்விதத் தவறும் இல்லை என்றும் கூறி இந்த ரிட் மனுக்கள் விதி 32ன் கீழ் ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல என்று நீதிபதிகள் குறிப்பிட்டு மனுக்களை தள்ளுபடி செய்திட முடிவு செய்தனர். அதனைத் தொடர்ந்து மனுதாரர்கள் 3 மனுக்களையும் திரும்பப் பெற்றனர்.

இவ்வழக்கில் ஒன்றிய அரசு சார்பில் முகில் ரோட்டகி வாதிட்டார். உதயநிதி ஸ்டாலின் சார்பில் மூத்த வழக்கறிஞரும் மாநிலங்களவை உறுப்பினருமான பி.வில்சன் ஆஜராகி வழக்கில் வெற்றி தேடித்தந்துள்ளார்.

உச்சநீதிமன்ற நீதிபதிகள் வழங்கிய தீர்ப்புகளின் மூலம் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சனாதனம் குறித்து கூறிய கருத்தில் அரசியலமைப்புச் சட்டப்படி அடிப்படை உரிமைகள் ஏதும் மீறப்படவில்லை என்பது நிரூபணமாகி உள்ளது.

இது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மீது தொடரப்பட்ட வழக்குகளில், அவருக்கு கிடைத்த மாபெரும் வெற்றியாக கருதப்படுகிறது.

### அரசுப் பள்ளிகளில் 22,931 ஸ்மார்ட் வகுப்பறைகள் நிறைவு:

## பள்ளிக் கல்வித் துறை படைத்து வரும் சாதனைகளால் மகிழ்கிறேன்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப்பதிவு!

**சென்னை, ஜன. 29 -**

**தமிழ்நாடு முழுவதும் அரசு தொடக்கப் பள்ளிகளில் ஸ்மார்ட் வகுப்பறைகள் அமைக்கும் பணி குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-**

தமிழ்நாடு முழுவதும் அரசு தொடக்கப் பள்ளிகளில் 22,931 ஸ்மார்ட் வகுப்பறைகள் அமைக்கும் பணியைக் கடந்த ஆண்டு ஜூன் மாதம் தொடங்கி வைத்தேன்.

அந்தப் பணி, இன்று சென்னை ஒக்கியம் துரைப்பாக்கம் அரசுப் பள்ளியில் நிறைவுபெற்றிருப்பதைத் தம்பி அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் தொலைபேசியில் என்னிடம் தெரிவித்தார்.

நவீனமயமான தொடக்கப் பள்ளிகள், நாட்டின் முதன்மையான உயர் கல்வி நிறுவனங்களில் நம் மாணவர்கள் இடம்பெற உதவும் மாதிரிப் பள்ளிகள் எனப் பள்ளிக்கல்வித் துறை படைத்து வரும் சாதனைகளால் மகிழ்கிறேன்!

அரசுப் பள்ளிகள் நம் பெருமையின் அடையாளம் என உரக்கச் சொல்வோம்!

இவ்வாறு முதல்வர் அவர்கள் தமது சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

### மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தில் நிலுவையிலுள்ள

## ரூ.1635 கோடி தொகையை உடனே விடுவித்திடுக!

### ஒன்றிய நிதி அமைச்சரை நேரில் சந்தித்து – தமிழ்நாடு நிதியமைச்சர் தங்கம் தென்னரசு கோரிக்கை! – கனிமொழி கருணாநிதி எம்.பி. பங்கேற்பு!

*புதுடெல்லி, ஜன. 29 -*

*மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தினை (MGNREGS) செயற்படுத்துவதில் எப்போதும் முன்னோடியாக இருந்து வருகிறது. மனிதசக்தி நாட்கள் உருவாக்கம், பெண்கள் பங்கேற்பு, மாற்றுத்திறனாளிகளுக்கு வேலைவாய்ப்பு, சரியான நேரத்தில் ஊதியம் வழங்குதல், பணிகளை முடித்தல் மற்றும் சொத்துக்கள் உருவாக்கம் போன்றவற்றில் தமிழ்நாடு தொடர்ச்சியாக முதன்மையான மாநிலமாக இருந்து வருகிறது.*

*இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் 85 இலட்சம் குடும்பங்களைச் சேர்ந்த 1.09 கோடிக்கும் அதிகமான தொழிலாளர்கள் பதிவு செய்துள்ளனர்.*

*86% வேலைவாய்ப்பு பெண் தொழிலாளர்களுக்கும், மொத்த வேலை வாய்ப்புகளில் 29% ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின குடும்பங்களுக்கும் வழங்கப்படுகிறது.*

*மேலும், ஒவ்வொரு ஆண்டும் 1 லட்சத்திற்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளி தொழிலாளர்கள் இத்திட்டத்தின் கீழ் வேலை வாய்ப்பு பெற்று வருகின்றனர்.*

*மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் 2024-25 ஆம் ஆண்டில் 27.11.2024 முதல் தொழிலாளர்களுக்கு ஊதியம் வழங்கப்படாத நிலையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஊதியத்திற்கான நிதியினை உடனடியாக விடுவிக்க கோரி 13.01.2025 அன்று கடிதம் வாயிலாக இந்திய பிரதமர் அவர்களை கேட்டுக் கொண்டார்.*

*நாளது தேதி வரை நிதி விடுவிக்கப்படாத நிலையில் 27.01.2025 அன்று புதுடெல்லியில் ஒன்றிய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் அவர்களை நிதி மற்றும் சுற்றுசூழல் கால நிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை அரசு கூடுதல் தலைமை செயலாளர் ககன் தீப் சிங் பேடி ஆகியோர் சந்தித்து மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் 27.11.2024 முதல் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஊதிய நிலுவை தொகையான ரூ.1,635 கோடியினை உடனடியாக விடுவிக்கக் கோரியும், 2024-25 ஆம் ஆண்டிற்கு கூடுதல் மனித சக்தி நாட்களுக்கு ஒப்புதல் வழங்கவும், மேலும் தமிழ் நாட்டில் இத்திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்திட தொடர்ந்து ஆதரவு வழங்க கடிதக் குறிப்பு வழங்கி கேட்டுக் கொண்டனர்.*

*அப்போது ஒன்றிய நிதி அமைச்சகத்தின் கூடுதல் செயலாளர் எஸ்.எஸ். யாதவ் உடன் இருந்தார்.*



உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல்துறை அமைச்சர் அர.சக்கரபாணி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் திண்டுக்கல் மாவட்டம். இடையக்கோட்டை, திருவேங்கடநாத சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான 22 ஏக்கர் நிலப்பரப்பில் பாரத ஸ்டேட் வங்கியின் பெருநிறுவன சமுதாய பொறுப்பு நிதியின் (CSR Fund) மூலம் மரக்கன்று நடும் நிகழ்வினை தொடங்கி வைத்தனர். உடன் ஆர். சச்சிதானந்தம் எம்.பி., ச.காந்திராஜன் எம்.எல்.ஏ., சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்தர மோகன், திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி மொ.நா. பூங்கொடி, இந்து சமய அறநிலையத்துறை கூடுதல் ஆணையர் டாக்டர் இரா. சுகுமார், பழனி சார் ஆட்சியர் சீ. கிஷன்குமார், பாரத ஸ்டேட் வங்கியின் தலைமை பொது மேலாளர் பர்மிந்தர் சிங், பொது மேலாளர் ஜெ. ஸ்ரீநிவாச ராவ் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.